இணை ஆணையர் மண்டலம்:

பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஒட்ட வேண்டும்

# காசி ஆன்மிகப் பயணம்

## 2023–2024 ஆம் நிதியாண்டில் காசி ஆன்மிகப் பயணம் செல்ல விருப்பம் தெரிவிக்கும் விண்ணப்பப் படிவம்

**(விண்ணப்பப் படிவம் விடுதலின்றி முழுமையாக பூர்த்தி செய்யப்பட வேண்டும்)**

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பதாரர் பெயர் | |
| 2. | தகப்பனார் / கணவர் பெயர் | |
| 3. | இருப்பிட முகவரி (தற்போது வசிக்கும் வீட்டின் நிலையான முகவரி மற்றும் பின் கோடு குறிப்பிட வேண்டும் மற்றும் அதற்கான ஆதாரம் இணைக்கப்பட வேண்டும்) | |
| 4. | பிறந்த தேதி மற்றும் வயது (60 முதல் 70 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்) | வயது : |
| 5. | ஆதார் எண். (AADHAR No.) | |
| 6. | ஆண்டு வருமானம் | ரூ. |
| 7. | விண்ணப்பதாரரின் கணவர்/மனைவி (Spouse) விண்ணப்பித்துள்ள விவரம் | |
| 8. | கைபேசி எண், | |
| 9. | முந்தைய ஆண்டுகளில் அரசு செலவில் காசி ஆன்மிகப் பயணம் சென்றவரா? ஆம் எனில் பயணம் மேற்கொண்ட தேதி விவரம் | |

| விண்ணப்பத்துடன்இணைக்கப்பட வேண்டிய ஆவணங்கள் | | இணைக்கப்பட்டுள்ளதா ஆம் / இல்லை | இணைக்கப்பட்டுள்ள பக்கம் எண் |
|---|---|---|---|
| 1. | இந்து மதத்தை சார்ந்தவர் என்பதற்கான சான்றிதழ் **(பள்ளி / கல்லூரிச் சான்றிதழ் / தொடர்புடைய வட்டாட்சியர் சான்று )** | | |
| 2. | பிறந்த தேதிக்கான சான்று **(பள்ளி / கல்லூரி / பிறப்புச் சான்று /கடவுச்சீட்டு(Passport) நகல்)** | | |
| 3. | வீட்டின் நிலையான முகவரிக்கான சான்று (குடும்ப **அட்டை / ஆதார் /கடவுச்சீட்டு(Passport) / வாக்காளர் அட்டை)** | | |
| 4. | 10 நாள் பயணம் செய்ய உடல் தகுதி உள்ளதற்கான அரசு மருத்துவரின் (Government CIVIL SURGEON) சான்று | | |
| 5. | ஆதார் அட்டை நகல் (AADHAR CARD)அல்லது நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN CARD) நகல் | | |
| 6. | வருமான சான்றிதழ் **(வட்டாட்சியர் சான்று / வருமானவரி தாக்கல் அத்தாட்சி)** | | |
| 7. | பாஸ்போர்ட் சைஸ் போட்டோ – 3 | | |

### உறுதி மொழி

இவ்விண்ணப்பத்தில் என்னால் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் அது தொடர்பாக நான் இணைத்துள்ள சான்றுகள் யாவும் உண்மை எனவும், ஆன்மிகப்பயணத்திற்கான நிபந்தனைகளை படித்து பார்த்து தெரிந்து கொண்டேன் எனவும், **ஆன்மிகப் பயணம் இராமேஸ்வரத்தில் துவங்கி இராமேஸ்வரத்தில் முடிவடைகிறது என்பதை அறிவேன்** எனவும், பயணத்தின்போது 10 நாட்களுக்கு எனக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள்/மருந்துகள் அனைத்தையும் என்னுடன் கொண்டு வருவேன் எனவும், கடந்த ஆண்டுகளில் அரசு செலவில் நான் ஆன்மிகப்பயணம் மேற்கொள்ளவில்லை எனவும் உறுதியளிக்கிறேன்.

இவ்விண்ணப்பத்தில் நான் அளித்துள்ள விவரங்கள் மற்றும் இணைத்துள்ள சான்றுகள் உண்மையல்ல என்று உறுதி செய்யப்பட்டால், என் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறிவேன்.

நாள்:–

விண்ணப்பதாரர் கையொப்பம்.

## 2023-2024 காசி ஆன்மிகப் பயணம் செல்ல விண்ணப்பிப்பதற்கான நிபந்தனைகள்

1) காசி ஆன்மிகப் பயணம்செல்ல விண்ணப்பிப்பவர்கள் இந்து மதத்தைச் சார்ந்தவராகவும், இறை நம்பிக்கை உடையவராகவும், தமிழ்நாட்டைச் சேர்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

2) விண்ணப்பதாரர்கள் 60 வயது முதல் 70 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். வயது சான்று இணைக்கப்பட வேண்டும்.

3) விண்ணப்பதாரர்களின் ஆண்டு வருமானம் ரூ.2,00,000/-ற்கு மிகாமல் இருக்க வேண்டும். வட்டாட்சியரிடமிருந்து வருமானச்சான்று பெற்று இணைக்கப்படவேண்டும்

4) காசி ஆன்மிகப் பயணம் (10 நாட்கள்) சென்று வரும் அளவிற்கு விண்ணப்பதாரர்களுக்கு போதிய உடல் தகுதி உள்ளதற்கான அரசு மருத்துவரின் (Government Civil Surgeon) சான்று கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.

5) விண்ணப்பதாரர்கள் தற்போது வசிக்கும் வீட்டின் நிலையான முகவரிக்கான ஆதாரம் இணைக்க வேண்டும்.

6) விண்ணப்பதாரர்களின் Aadhaar Card ஆதார் அட்டை நகல் (அல்லது) PAN Card நிரந்தர கணக்கு எண் அட்டை நகல் இணைக்கப்பட வேண்டும்.

7) இந்து சமய அறநிலையத்துறையின் ஒவ்வொரு இணை ஆணையர் மண்டலத்திற்கும், தலா 15 விண்ணப்பதாரர்கள் வீதம், 20 இணை ஆணையர் மண்டலங்களிலிருந்து 300 விண்ணப்பதாரர்கள் மட்டும் அந்தந்த மண்டல இணை ஆணையர்களின் பரிந்துரையின் பேரில் தேர்வு செய்யப்படுவர்.

8) ஆன்மிக பயணத்திற்கான விண்ணப்பங்களை தங்களது இருப்பிடம் அமைந்துள்ள இந்து சமய அறநிலையத்துறை மண்டல இணைஆணையர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய இணைப்புகளுடன் மீள அதே மண்டல இணைஆணையர் அலுவலத்திற்கு 20.11.2023-க் குள் அனுப்ப வேண்டும். வேறு மண்டல இணை ஆணையர் அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட மாட்டாது.

9) விண்ணப்பதாரரின் கணவரோ / மனைவியோ (spouse) விண்ணப்பித்திருந்தால், அதன் விபரத்தினை தமது விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும்.

**10) தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பத்து நாட்கள் பயணத்திற்கு தேவையான அத்யாவசிய மருந்துகள்/பொருட்களை தங்களுடன் எடுத்து வரவேண்டும்.**

11) தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் தங்களுடன் சிறுகுழந்தைகளை அழைத்து வர அனுமதி இல்லை.

12) தேர்வு செய்யப்படும் 300 விண்ணப்பதார்களையும், ஒரே பயணமாக அல்லாமல், 2 அல்லது 3 பயணங்களாக பிரித்து அழைத்துச் செல்ல நேரிடும் போது, ஒவ்வொரு பயணத்திற்கும் குலுக்கல் முறையில் விண்ணப்பதாரர்கள் தேர்வு செய்யப்பட்டு அறிவிக்கப்படுவர்.

13) ஆன்மிகப் பயணத்தின் போது மிக விலையுயர்ந்த ஆபரணங்களை அணிந்து வருதல் கூடாது.

**14) ஆன்மிக பயணத்திற்கு தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் குறிப்பிட்ட பயண தேதிக்கு முந்தைய நாளே தமது சொந்த செலவில் இராமேசுவரம் வந்து அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் அலுவலகத்தில் தமது வருகையை பதிவு செய்ய வேண்டும். அவ்வாறே இராமேசுவரத்தில் ஆன்மிக பயணம் நிறைவு செய்த பின்னர் தமது சொந்த செலவில் அவரவர் இருப்பிடம் திரும்ப வேண்டும்.**

**15) இராமேசுவரத்தில் துவங்கும் இந்த ஆன்மிகப் பயணம் காசி தரிசனம் முடித்து மீண்டும் இராமேசுவரம் வந்து அருள்மிகு இராமநாதசுவாமியை தரிசித்த பின்னரே நிறைவுபெறும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.**

**16) விண்ணப்பதாரர் தனது ஆயுட் காலத்தில் ஒரு முறை மட்டுமே மானியம் பெற தகுதியானவர் என்பதால் இதற்கு முன் அரசு செலவில் காசி ஆன்மிகப் பயணம் மேற்கொண்டவர்கள் மீளவிண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவர்.**